வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.11.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 330 பக்கங்கள் : 12

# வலுக்கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்ட 6 தமிழ் இளைஞர்கள்!

## யாழ்ப்பாண பெற்றோர் அதிர்ச்சியில்

கொழும்பு, நவம்பர் 26

**பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறப்பட்டு பயணித்த 6 தமிழ் இளைஞர்கள் ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை யாழ்ப்பாணப் பெற்றோர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

உக்ரேனுக்கு எதிராக ரஷ்யா முன்னெடுத்து வருகின்ற யுத்தத்தில் புலம் பெயர்நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் வலுக்கட்டாயாக இணைக்கப்படுவதாக அண்மைக் காலமாக குற்றச்சாட்டுக்கள் எழுந்து வந்தன.

இந்நிலையில் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவர் சுற்றுலா விண்ணப்பத்தின் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்கு சென்ற வேளை வலுக்கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட் டுள்ளதாக வெளியாகியுள்ள சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



கடந்த செப்ரெம்பர் மாதம் 04ஆம் திகதி குறித்த இளைஞர் இலங்கையிலிருந்து பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்கு 11

## யாழில் அடை மழையினால் 2035 குடும்பங்கள் பாதிப்பு!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 2035 குடும்பங்களை சேர்ந்த 7416 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 21 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனைத்து முக அமைத்துவ பிரிவின் பிரதிபணிப்பாளர் ரி.என். சூரிய ராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தினால் இதுவரை 288 11

## எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் திருத்த யோசனையை சமர்ப்பிக்குக!

இலங்கை மின்சார சபைக்கு அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் கட்டணத் திருத்த யோசனையை சமர்ப்பிக்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

மேலும் இரண்டு வார கால அவகாசம் வழங்குமாறு மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு பதில் வழங்கி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இதனை தெரிவித்துள்ளது.

உரிய தினத்திற்கு முன்னர் கட்டணத் திருத்த யோச னையை முன்வைக்கத் தவறும் பட்சத்தில், 11

## புயல் நகரும் வேகத்தில் மாற்றம் வடக்கு - கிழக்குக்கு பெரும் ஆபத்து

எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ. 26

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்காக உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது. நகரும் வேகம் மந்தமாக காணப்படுகின்றது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை தலைவர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறையின் பானமயிலிருந்து தென்கிழக்காக 238 கி.மீ. தொலைவில் அதன் மையம் காணப்படுகின்றது.

இன்று காலை 8.00 மணியளவில் பானமயிலிருந்து 11

## கிளிநொச்சியில் 1,679 பேர் பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 26

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலையால் 493 குடும்பங்களைச் சேர்ந்த 1679 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 04 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு 11

## தொலைபேசிக்கு வந்த அழைப்பு பணத்தை இழந்த யாழ்.இளைஞன்

யாழ்ப்பாணம், நவ. 26

தொலைபேசி இலக்கத்திற்கு பெறுமதியான பணப் பரிசில் கிடைத்துள்ளதாக தெரிவித்து, இளைஞன் ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்த இரண்டு இலட்சம் ரூபா பணம் நூதனமாக கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

மேசன் தொழிலாளியான இளைஞன் ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்த இரண்டு 11



## அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவளிக்க சீனா தயார்!

அந்நாட்டு தூதுக்குழு அநுரவிடம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்க சீனா தயாராக இருப்பதாக சீனத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் சர்வதேச திணைக்கள உப அமைச்சர் தலைமையிலான குழுவினருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் 11

## 200 மில்லியன் டொலர் கடனுதவி ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி!

கொழும்பு, நவ. 26

இலங்கையின் எரிசக்தித் துறையின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகபூமி கடோனோ இதனைத் தெரிவித்துள்ளார்.

போட்டித்தன்மை கொண்ட புதுப்பிக்கத்தக்க 11

## தலைமை பொறுப்பை தந்தால் ஐ.தே.கவுடன் இணையத் தயார்!

ஹர்ஷன ராஜகருணா கூறுகிறார்

கொழும்பு, நவ. 26

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசவை தலைமைப் பொறுப்பில் அமர்த்தினால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார் என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே 11

## சட்டங்களை துஷ்பிரயோகப்படுத்த எமது அரசாங்கத்தில் இடமில்லை

பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, நவ. 26

சட்டங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. நாட்டை அழிக்கும் பதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் சுனில் வட்டகல 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைத்தீவில் அடை மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கிய வட்டுவாகல் பாலம்

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியில் வட்டுவாகல் பாலத்தை மூடி வெள்ளநீர் பாய்வதனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் சிரமத்தை எதிர்கொள்வதோடு விபத்து ஏற்படும் சாத்தியங்கள் அதிகளவாக இருப்பதனால் பாலத்தின் இரு மருங்கிலும் பொலிஸார் மற்றும் கடற்படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் நிலவிவரும் சீரற்ற கால நிலைக்கு மத்தியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக மழை தொடர்ச்சியாக பெய்து வருகின்றது.

இதனால், நந்திக்கடல் நீர் மட்டம் நிரம்பியுள்ளது. இதனால் வட்டுவாகல் பாலத்தின் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மூடியதுடன் நீர் பாய்ந்தோடாமல் தேங்கியிருக்கும் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு பாலத்தின் அணைக்கட்டுகள் சரியாக தெரியாமலிருக்கின்றது.

பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் வீதி எது கடல் எது என தெரியாத நிலையிலையே பயணிகள் பயணம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

விபத்து ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் வட்டு வாகல் பாலத்தின் இரு கரையிலும் பொலிஸார், கடற்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

# ஓலைத்தொடுவாய் இடைத்தங்கல் முகாமில் மக்களின் குறைகளைக் கேட்டறிந்த ரவிகரன்

மன்னார், நவ. 26

மன்னாரில் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு மன்னார், ஓலைத்தொடுவாய் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன் தினம் சந்தித்து கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

காற்றாலை திட்டத்தின் போது வடிகால்கள் மூடப்பட்டதனாலேயே ஓலைத் தொடுவாய் பகுதியில் வெள்ளப் பாதிப்பு அதிகரித்திருப்பதாக மக்களால் இதன்போது, பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரியப்படுத்தப்பட்டது.

இவ்வாறு காற்றாலைத் திட்டத்தின்போது மூடப்பட்ட வாய்க்கால்களை மறுசீரமைப்பு செய்தால் வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கமுடியும் எனவும் அதற்கு உரிய நவடிக்கை எடுக்குமாறும் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் தமக்கு நுளம்பு வலை பெற்றுத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் வாய்க்கால்களை மறுசீரமைப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்த ரவிகரன், இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# வெள்ளத்தை வெளியேற்றக்கோரி மன்னாரில் மக்கள் போராட்டம்!

## பிரதான வீதியை மறித்ததால் போக்குவரத்து பாதிப்பு

மன்னார், நவ. 26

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள துள்ளுக் குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பாவிலுப்பட்டான் குடியிருப்பு கிராம மக்கள் தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்றக் கோரி நேற்றைய தினம் காலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கிராமத்தில் 108 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்றக் கோரி மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், குறித்த கிராமத்துக்குச் செல்லும் பாதையிலிருந்து நீர் வெளியேறிச் செல்வதற்கான மதகு உரிய முறையில் செப்பனிடப்படவில்லை எனவும் மக்கள் விசனம் வெளியிட்டனர்.

இந்த நடவடிக்கையை முன்னெடுத்தால் வெள்ளம் தமது கிராமத்தில் தேங்காது எனவும், குறித்த நடவடிக்கையை உடன் ஆரம்பிக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் வெள்ளத்தை தமது கிராமத்திலிருந்து வெளியேற்ற அதிகாரிகள் யாரும் முன்வரவில்லை எனத் தெரிவித்து மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

எனினும் தலைமன்னார் பொலிஸார் மற்றும் கிராம உத்தியோகத்தர் குறித்த பகுதிக்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

இந்தப் பிரச்னை தொடர்பில், உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்து துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பொலிஸார் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் மக்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதிகாரிகள் குறித்த பகுதிக்கு வருகை தந்து துரித வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (எ)

# வட மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை மீள இயக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை!

யாழ்ப்பாணம்,நவ.26

வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை (NPCODA) மீள இயக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கண்சத்திர சிகிச்சை நிபுணர் மலரவன், வவுனியா பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, வடக்கு மாகாண சபை இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குவிய மையத்தை உருவாக்குமாறும் கேட்டுக்கொண்டனர். இவற்றைச் சாதகமாக ஆராய்வதாக ஆளுநர் அவர்களிடம் உறுதியளித்தார். (05)

# நெல்லியடி விபத்தில் மாணவன் படுகாயம்!

வடமராட்சி, நவ. 26

நெல்லியடி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

தனியார் கல்வி நிலையத்தில் கல்வி சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை மாலிசந்தி பகுதியிலிருந்து புளியடி சந்தி நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ள து.

காயமடைந்த மாணவனை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சக மாணவர்கள் கொண்டு சென்றனர்.

அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (அ-02)

# இந்திய மீனவரின் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம்,நவ.26

நெடுந்தீவு கடற்பரப்பில் இம்மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்களை கைதுசெய்த கடற்படையினர் மறுநாள் கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் மயிலிட்டியில் வைத்து துறைமுகத்தில் ஒப்படைத்தனர்.

அவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் 23 மீனவர்களையும் முன்னிலைப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார். (05)



சிறீலசிறீ ஆறுமுக நாவலர் குருபூஜை விழா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் வேதாந்தமடம் சிறீ சிவகுருநாத குருபீட எட்டாவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.11.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீனவர் பிரச்சினைக்கான தீர்வு?

ஒரு கடற்றொழில் அமைச்சர் என்பதற்கு அப்பால் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பேசிவருகின்றார். இராமலிங்கம் சந்திரசேகர் ஜே.வி.பியின் நீண்டகால உறுப்பினர். பல வருடங்களாக வடக்கில் நிலை கொண்டு செயல்பட்டு வருகின்றார். அவர் கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சராக நியமியக்கப்பட்டமையானது, வரமா அல்லது சாபமா என்னும் கேள்வியுமுண்டு. ஏனெனில் கோட்டாபய ராஜபக்ஷ கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவை நியமித்திருந்தார். உண்மையில் ஒரு பெரும்பான்மை இனத்தவரைத்தான் அந்தப் பொறுப்புக்கு நியமித்திருக்க வேண்டும். ஆனால், திட்டமிட்டு, வடக்கு மாகாண தமிழ் அரசியல்வாதியான - அதேவேளை, தமிழ் நாட்டு அரசியல் சூழலில் எதிர்மறையான விமர்சனங்களைக் கொண்டிருக்கும் டக்ளஸ் தோவானந்தாவை நியமித்தார். இதன் மூலம், இலங்கையின் கடல் எல்லைகள் தொடர்பான பிரச்னையை வெறுமனே வடக்கு மாகாணத்திற்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்குமான பிரச்னையாக சுருக்கினார்.

டக்ளஸ்ும் வேறு வழியின்றி பதவிக்காக தலையசைத்தார். தனது பங்கிற்கு பல விடயங்கள் தொடர்பில் பேசினார். ஆனால், மீனவர்களின் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் ஒரு குண்டூசி அளவு கூட அவரால் முன்னேற்றங்களை காண்பிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் கடும் தொனியிலும் டக்ளஸ் பேசினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை - எனெனில், தமிழ் நாட்டு மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிப்பு அதற்கு எதிரான வடக்கு மீனவர்களின் குரல்கள் என்பவை ஒரு நெடுங்கால பிரச்னை - மூன்று அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட, மிகவும் சிக்கலான பிரச்னை. அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பது முயலில் கொம்பைத் தேடுவதற்கு ஒப்பானது.

முயலில் கொம்பைப் தேடுமாறு, டக்ளஸ் தேவானந்தாவிடம், கோட்டாபய பணித்திருந்தார் - தற்போது, அந்தப் பொறுப்பை இராமலிங்கம் சந்திரசேகரிடம் அநுரகுமார திஸநாயக்க ஒப்படைத்திருக்கின்றார். இதற்கிடையில் வடக்கு, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்வதில் சீனா ஆர்வம் காண்பித்து வருவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. மீன்பிடித் தொழில்தான், சீனாவின் அதிக கரிசனைக்குரிய விடயமாகும் - ஏனெனில் மீனவர்கள்தான் அதிருப்தியுடன் இருக்கின்றனர். இதனையும் சந்திரசேகர் சமாளிக்க வேண்டும்.

டக்ளஸ் வடக்கு மாகாண அரசியல்வாதி, அதேவேளை தமிழ் நாட்டு அரசியல் வட்டாரங்களில் எதிர்ப்பை சம்பாதித்திருந்த ஒருவர் - அவரால் நேரடியாக தமிழ் நாட்டு அரசாங்கத்தோடு பேச முடியாத நிலைமையிருந்தது. ஆனால் அவ்வாறான பிரச்னைகள் சந்திரசேகருக்கு இல்லைதான். எனினும் இந்தப் பிரச்னையை கையாள்வது மிகவும் சவாலானது. ஆரம்பத்தில் அனைத்தும் சுமுகமாக இருப்பது போன்ற தோற்றம் தெரியக் கூடும். ஆனால், சில மாதங்கள் கழித்துத்தான், புதிய பிரச்னைகள் மேற்பரப்பிற்கு வரும்.

இராமலிங்கம் சந்திரசேகர் எவ்வாறு இந்தப் பிரச்னையை கையாளப் போகின்றார்?

**வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2024**

*"பசிய காடுகள் இயற்கையின் படைப்பு
பாலை வனங்கள் மனிதனின் படைப்பு."*
- கவிஞர் இன்குலாப் .



## மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு





வவுனியா, நவ. 26
மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக நகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபியில் இருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டதுடன், நான்கு மாவீரர்களின் தாயா ரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிர் நீத்த மாவீரர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

## வவுனியா ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

வவுனியா, நவ. 26
வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அப்பகுதி கமநல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விவசாயிகள் உடனடியாக அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

100 ஏக்கருக்கு மேற்பட்ட வயல்களுக்கு நீர் வழங்கும் ராமயன்குளம் அதிகளவான மழை வீழ்ச்சி காரணமாக உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.

எனவே, இப் பேரிடரை தடுக்கும் முகமாக



விவசாயிகளால் மண் மூடைகள் அடுக்கி முற் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
(எ)

## யாழில் காணிப்பதிவு பணிகள் தற்காலிகமாக நடைபெறாது

யாழ்ப்பாணம்,நவ. 26
யாழ். மாவட்ட காணிப் பதிவகத்தில் துரித சேவைகள் மற்றும் தேடுதல் பணிகள் தற்காலிகமாக நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காணிப் புத்தகங்கள் ஸ்கான் செயல்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளதால் இன்றும் நாளை 27 ஆம் திகதி வரை துரித சேவைகள் மற்றும் தேடுதல் கடமைகள் எதுவும் நடைபெறாது என்பதுடன் சாதாரண சேவைகளில் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பிரதிகள் நான்கு நாட்களின் பின்னரே வழங்கப்படும் என்றும் மாவட்ட காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் - 26 செவ்வாய்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 11
நல்ல நேரம் :7.31 -9.00
ராகு காலம் :3.00 - 4.30
திதி : ஏகாதசி




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**மிதுனம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். முடிவுகள் எடுக்கும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். அழகும் இளமையும் கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். சாதாரணமாக பேசுவதை கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

**துலாம்**
எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள்.

**விருட்சிகம்**
சமயோஜித புத்தியால் எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். எதிர் பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். எதிர் பார்த்த நல்ல செய்தி வரும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். வேலையாட்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

யாழ்ப்பாணம், நவ. 26

கடும் மழை - வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கல்லுண்டாய் பகுதியைச் சேர்ந்த 59 குடும்பங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 2, 95, 000 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, கல்லுண்டாய் பகுதியைச் சேர்ந்த கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கு 45, 000 ரூபாய் பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கப்பட்டது.



கல்லுண்டாய் ஐக்கிய சனசமூக நிலைய தலைவர்க. செந்தூரன் தலைமையில் நடைபெற்ற இந்த உதவிகள் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் உதவிகளை வழங்கினார்.

இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர். (எ-02)

# வீதியை புனரமைத்த இளைஞர்கள்

யாழ்ப்பாணம், நவ. 26

தென்மராட்சி வரணி, நாவற்காடு, கரம்பைக் குறிச்சி பகுதி மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பிரதான வீதியில் தாழ் நிலப்பகுதி ஒன்றில் மழை காலங்களில் அதிகளவான வெள்ளம் தேங்கி நிற்பதனால் குறித்த வீதியூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் நாவற்காடு, கரம்பைக்குறிச்சி இளைஞர்கள் இணைந்து தமது சொந்த நிதிப் பங்களிப்புடன் குறித்த வீதியூடாக மக்கள் சிரமப்படாது செல்லும் வகையில் சீர் செய்துள்ளனர்.



இந்த வீதியை சீர் செய்யும் வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்துக்கான செலவை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி. பிரபாகரன் பொறுப்பேற்றுள்ளார். (எ-05)

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

மாங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மூன்றாவது நபரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மாங்குளம் கற்குவாறிப் பகுதியைச் சேர்ந்த மரியதாஸ் யுவான் கீர்த்தி (வயது - 36) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

கடந்த 20 ஆம் திகதி மல்லாவியிலிருந்து மாங்குளம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர். இந்த நிலையில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை மாங்குளம் பொலிஸார் நெறிப்படுத்தினர். (எ-2-5)

# கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு பகுதியில் கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். நீர்வேலி பகுதியைச் சேர்ந்த சோ. மிதுர்சன் (வயது - 28) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த இளைஞனை காணவில்லை என்று உறவினர்கள் தேடிய நிலையில் அவரது சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-2-5)

# வடக்கு விவசாயஅமைச்சின் செயலாளராக சிறீ நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 26

வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளராக ஆ. சிறீ, வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, வடக்கு மாகாண பேரவை செயலாளராக ம. ஜெகூ நியமிக்கப்பட்டுள்ளார். (எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களை நினைவுகூர தடையில்லை புலிச்சின்னம், சீருடை பயன்படுத்தாதீர்!

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

**வடக்கு மக்கள் போரில் இறந்த தமது உறவினர்களை நினைவு கூரலாம். ஆனால் புலிகள். சின்னத்தையோ சீருடைகளையோ அல்லது படங்களையோ பயன்படுத்தி மாவீரர் நாளை அனுட்டிக்க முடியாது என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஆனந்த விஜேபால இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை உறவினர்களுக்கு சட்டப்படி உள்ளது. ஆனால் வடக்கில் மாவீரர்களை கொண்டாட இடமில்லை. புலிகள் அமைப்பின் சின்னம் அல்லது சீருடைகள் அல்லது அதன் படங்களைப் பயன்படுத்த முடியாது. நாட்டில் சட்டம் உள்ளது, சட்டப்படி புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பு.

ஆனால் அது வடக்கோ, கிழக்கோ, தெற்கோ அல்லது மலையகமோ, எதுவாக இருந்தாலும், உங்கள் குழந்தைகளில் ஒருவர் இறந்தால், அந்தக் குழந்தையை நினைவு கூர உங்களுக்கு உரிமை உண்டு. அதன் மூலம் தடை செய்யப்பட்ட அமைப்புகளை நினைவு கூர்ந்து மீண்டும் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவார்கள் என்பதை சமூகம் நம்பவேண்டியதில்லை.

இறந்த உறவினர்களை நினைவு கூரும் யாரையும் நாங்கள் தடுக்கவில்லை. அதனால்தான் வடபகுதி மக்கள் சில சமயங்களில் உறவினர்களை நினைவு கூர்வதற்கு வேறு அர்த்தம் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறேன்.

ஆனால் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகும், அவர்கள் தங்கள் சின்னங்கள், சீருடைகள், பனர்களைப் பயன்படுத்தி கொண்டாடுவதற்கு இடமில்லை. ஆனால், இந்த நாட்டிலுள்ள எந்தவொரு நபரின் இறந்த உறவினரையும் நினைவு கூருவதை நாங்கள் ஒரு போதும் தடுக்க மாட்டோம்- என்றார். (அ)

# அர்ச்சுனா எம்.பியுடன் பேசவுள்ள சபாநாயகர்

கொழும்பு, நவ. 26

இந்த வருடம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்ந்தது தொடர்பில், இனவாதம் குறித்து கருத்து வெளியிட்டமையினால் அவர் தொடர்பில் விவாதம் ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் கண்டிக்கு விஜயம் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சபாநாயகர் அசோக ரன்வல இதனை தெரிவித்தார்.

"ஒரு தனிநபராக அவரது அபிலாஷை என்னவென்று எங்களுக்குத் தெரியாது.

அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களின் அபிலாஷை மிகவும் தெளிவானது.

இன்று நாட்டில் அவ்வாறானதொன்றை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

அந்த மக்கள் வடக்கு, மேற்கு அல்லது கிழக்காக இருக்கலாம், நல்லிணக்கத்துடன் நாட்டை அபிவிருத்தி செய்ய தலையிடுவார்கள் என அனைத்து மக்களும் நம்புகின்றனர்.

இது ஒரு தனி நபரால் செய்யப்பட்டது என்பது எங்களுக்குத் தெரியும்.

அதுபற்றி அவரிடம் பேசி, அவரது அனைத்து முகநூல் கணக்குகளையும் சரிபார்த்தோம்.

நாமும் அவருடன் பேசலாம், புத்திசாலித்தனமாக செயல்பட்டு எதிர்காலத்தில் இதை தெளிவுபடுத்துவோம்"-என்றார். (அ)

# ரூ.10 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியான 3 மோ. சைக்கிள்களை திருடிய நபர் கைது!

கொழும்பு, நவ. 26

நாட்டின் பல பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை திருடிய நபர் ஒருவரை கஹதுட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கஹதுட்டுவ, மீரிகம, கட்டுநாயக்க ஆகிய பிரதேசங்களில் இருந்து 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான மூன்று மோட்டார் சைக்கிள்களை சந்தேகநபர் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்டதாக தெரிவிக்கப்படும் 3 கையடக்கத் தொலைபேசிகளையும் சந்தேகநபரிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், திருடிய மோட்டார் சைக்கிள்களை ஆடிஅம்பலம பகுதியில் இரண்டு இடங்களில் ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு அடகு வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடகு வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் காவலில் எடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் படுவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுடையவர். (அ)

# ரவியின் தேசியப்பட்டியல் விடயம் ரணிலுக்கு தெரிந்திருக்கவில்லை

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, நவ. 26

ரவி கருணாநாயக்கவின் பெயர் தேசியப்பட்டியலுக்கு அனுப்பிவைத்த விவகாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிந்திருக்க முடியாது. அதனாலே அவரின் நடவடிக்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு தேசியப்பட்டியல் ஆசனங்கள் இரண்டு கிடைக்கப் பெற்றன. அதில் ஒன்றை ரவி கருணாநாயக்க எடுத்துக்கொண்டுள்ளார். அவர் அதனை பெற்றுக்கொண்ட விவகாரம் தொடர்பில் முன்னணி கட்சி உறுப்பினர்கள் யாருக்கும் தெரியாது. இந்த விவகாரம் தொடர்பில் முன்கூட்டியே ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்திருந்ததாக ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கிறார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த விடயம் தெரிந்திருந்தால், அவரின் இந்த நடவடிக்கை தொடர்பில் ஏன் விசாரணை நடத்த குழு அமைக்க வேண்டும்.

அத்துடன் இந்த விவகாரம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவே ஆரம்பமாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். கட்சியில் யாரும் ரணில் விக்கிரமசிங்கவை பணயக்கைதியாக வைத்திருப்பதில்லை. அவ்வாறு அவரை யாராலும் பணயக்கைதியாக வைக்கவும் முடியாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு யாரை வேண்டுமானாலும் பணயக்கைதியாக வைத்திருக்க முடியும்.

அதேநேரம் புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் அடுத்த தேசிய பட்டியலுக்கு யாரை நியமிப்பது என்ற விடயத்தில் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. என்றாலும் தற்போதைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு பெரிதாக எதனையும் செய்ய முடியாது. என்றாலும் விவாதங்களின் போது தரவுகளை முன்வைக்க முடியுமான இளம் ஒருவரை அனுப்பவேண்டும் என்றே பலரது நிலைப்பாடாக இருந்தது. அந்தவகையில் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை நியமிப்பதற்கு பெரும்பான்மையானவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் சுதந்திர கட்சி, தங்களின் உறுப்பினர் ஒருவரை தேசியப்பட்டியலுக்கு நியமிக்க வேண்டும் என தெரிவித்து வருகிறது. அதனால் இறுதி முடிவெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மிக விரைவில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும்-என்றார். (அ)

# மத்தள விமான நிலையத்தின் செலவு வருமானத்தைவிட 8 மடங்கு அதிகம்!

கொழும்பு,நவ. 26

2023ஆம் ஆண்டு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செலவானது, வருமானத்தை விட எட்டு மடங்கு அதிகரித்துள்ளதாகத் தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த ஆண்டு அதன் இயக்கச் செலவு 2 ஆயிரத்து 412 மில்லியன் ரூபாவாகவும், வருமானம் 288 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, 2023ஆம் ஆண்டு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் 2 ஆயிரத்து 124 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ருஹுணு பல்கலைக்கழகத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரி நியமிப்பு

கொழும்பு, நவ. 26

ருஹுணு பல்கலைக்கழகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக, அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரியாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர். எம். யு. எஸ். கே. ரத்நாயக்க நியமிக்கப்பட்டார்.

கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய விசேட வர்த்தமானியை வெளியிட்டு இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 20(4)(அ) சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ருஹுணு பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் பாரியளவில் சீர்குலைந்துள்ளதாகவும், அதனை வழமைக்கு கொண்டு வருவதற்கு நிறுவன அதிகாரிகள் தவறியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, சட்டம் அல்லது விதி, ஒழுங்குமுறை, நியதி, சட்டத்தின் கீழ் முறையே பல்கலைக்கழக துணைவேந்தருக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செயல்படுத்துவதற்கு ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பதிலாக தகுதி வாய்ந்த அதிகாரியாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர். எம். யு. எஸ். கே. ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# வலம்புரி சங்கை 1 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றவர் கைது!

கொழும்பு, நவ. 26

மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அபரெக்க அதிவேக வீதிக்கு அருகில் அரிய வகை வலம்புரி சங்கு ஒன்றை ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபரொருவர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக திஹகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திஹகொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மீட்சி திட்டங்களில் வெளிப்படைத்தன்மை வேண்டும்!

## அரசிடம் கோருகிறார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, நவ. 26

**தேசிய மற்றும் சர்வதேச கடன்கள் அரசாங்கத்துக்கு பாரிய சவாலாகும். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும். நாட்டின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையை குறிப்பிட வேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருதரப்பு கடன் 28 பில்லியன் டொலராக காணப்பட்டது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து 11 மில்லியன் டொலர் பல்தரப்பு கடன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நடைமுறை பொருளாதாரச் சவால்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதுடன், வாக்குறுதி வழங்கியதை போன்று நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுப்பது அரசாங்கத்துக்கு சவால்மிக்கது.

2022 ஏப்ரல் 08 ஆம் திகதி இலங்கை வங்குரோத்து நிலையடைந்து விட்டது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. செலுத்தப்படாத கடன்கள் மற்றும் அதற்கான வட்டி தற்போது 8 பில்லியன் டொலராக உயர்வடைந்துள்ளது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை தமது கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் திருத்தம் செய்வதாக தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு குறிப்பிட்டது. இருப்பினும் ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாமல், கடந்த அரசாங்கம் கடைப்பிடித்த பொருளாதார கொள்கைகளையே அரசாங்கம் பின்பற்றுகிறது.

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்க வேண்டும். நாட்டின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையை குறிப்பிடவேண்டும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது- என்றார். (அ)

# மு.கா உயர்பீடத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்டார் ஹரீஸ்

கொழும்பு, நவ. 26

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட அங்கத்துவத்தில் இருந்து அக்கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரினால் நேற்று திங்கட்கிழமை அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கட்சியின் வெற்றிக்கு ஒத்துழைக்காமல் கட்சிக்கு எதிராக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எச்.எம்.எம். ஹரீஸ் இவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இக்குற்றச்சாட்டு குறித்து ஒரு வார காலத்திற்குள் விளக்கமளிக்குமாறு இக்கடிதத்தின் ஊடாக அவர் கேட்கப்பட்டுள்ளார். இக்காலப்பகுதியினுள் பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் கட்சி அங்கத்துவத்தில் இருந்து விலக்குவதற்கான ஒழுக்காற்று நடவடிக்கை அவர் மீது எடுக்கப்படும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். (அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 26

பிரதான பொருளாதார மத்திய நிலையங்களில் ஒன்றான கெப்பட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, அதிகளவிலான மரக்கறிகளின் விளைச்சல் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, கரட், லீக்ஸ் உள்ளிட்ட மலைநாட்டு மரக்கறிகளின் விலைகள் குறைந்துள்ளன.

இந்தநிலையில், மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# மழையுடனான காலநிலை காரணமாக வெள்ளப் பெருக்கு, மண் சரிவு அபாயம்!

கொழும்பு, நவ. 26

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை மல்வத்து ஓயா உள்ளிட்ட 12 ஆறுகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் வெள்ளப் பெருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மல்வத்து ஓயா, கலா ஓயா, கனகராயன் ஆறு, மா ஓயா, பரங்கி ஆறு, மகாவலி கங்கை, மாதுறு ஓயா மற்றும் யான் ஓயா உள்ளிட்டவற்றுக்கு வெள்ளப் பெருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆறுகளை அண்டியுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்களை அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மடுல்சீமையில் இருந்து குருவிகொல்ல, பிட்டமாறுவ, மற்றும் மெட்டிக்காத்தன்ன செல்லும் பிரதான வீதியில் கல்லுல்ல பாலத்திற்கு அருகாமையில் பாரிய மண் மேடு சரிந்து விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக மடூல் சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம், பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்குத் தொடர்ந்தும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது. (அ)

# பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம்!

## பரீட்சை ஆணையாளர் நாயகம் கோரிக்கை

கொழும்பு, நவ. 26

உயர்தரப் பரீட்சை தினங்களில் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடுகளையும் செய்ய வேண்டாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் நாடளாவிய ரீதியில் 2,312 நிலையங்களில் உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகியுள்ள நிலையில், பரீட்ைசகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதனை மக்கள் விதியாக இல்லாமல் உணர்வுடன் செய்ய வேண்டுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பிள்ளைகளுக்கு ஏதேனும் பிரச்னை இருந்தால், அதைத் தீர்க்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு பிள்ளைகளும் நல்ல சூழ்நிலையில் இந்த பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும். அந்த வகையில் எனக்கு அனைவரின் ஆதரவும் தேவை.

மேலும், பரீட்சை நேரத்தில் இவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எதையும் செய்யாதீர்கள்.

இது தொடர்பாக பொலிஸாருடன் பேசி, தேவையான திட்டத்தை தயாரித்துள்ளோம். நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாத்தறை மாவட்டத்தில் நான்கு பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும் கடற்படையும் இராணுவமும் உடனடியாக நடவடிக்கை எடுத்து மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் சென்றனர்-என்றார். (அ)

# வட்டவளை பகுதி விபத்தில் இரண்டாகிய தனியார் பஸ்!

## நான்கு பயணிகள் காயம்





கொழும்பு, நவ. 26

ஹற்றன் -கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் நான்கு பயணிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேகமாக பயணித்த தனியார் பஸ்ஸொன்று எதிர்திசையில் வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸூடன் மோதியதில் தனியார் பஸ்ஸின் பின்பகுதி இரண்டாகப் பிரிந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கரோலினா தோட்டத்திற்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் கினிகத்ஹேனவில் இருந்து ஹற்றன் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் தனியார் பஸ் ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிரே வந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸை பார்த்த தனியார் பஸ் சாரதி திடீரென பிரேக் போட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனால் தனியார் பஸ் சறுக்கிச் சென்று, அதன் பின்பகுதி இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸூடன் மோதியதில் தனியார் பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த பயணிகளின் நிலை கவலைக்கிடமாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன்-கொழும்பு பிரதான வீதியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வீதிகள் வழுக்கும் தன்மையினால் வாகனங்களை செலுத்தும்போது அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வாகனச் சாரதிகளை கோரியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் பிரபலமடைவதற்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தாதீர்!

## றொஷான் ரணசிங்க அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, நவ. 26

**உலகில் 38 நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு இன்றும் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கில் பிரபல்யமடைவதற்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் றொஷான் ரண சிங்க தெரிவித்தார்.**

பொலனறுவை பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கி யுள்ளதை முழுமையாக வர வேற்கிறோம்.

தெற்கு அரசியல் கட்சிக்கு வடக்கு மக்கள் ஆதரவளித்துள் ளமை சிறந்த அரசியல் மாற்ற மாகும். தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழு மையான ஒத்துழைப்பு வழங்கு வோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க எளிமையானவர், பாராளுமன்றத்துக்கு எளிமை யான முறையில் வருகை தந்தார் என்று தற்போது ஜனாதிபதி யின் புகழ்பாடுகிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபயவும் தனது வீட்டில் இருந்து ஜனாதிபதி செயலகத் துக்கு சென்றார். எளிமையான முறையில் பாராளுமன்றத்துக்கு சென்றார். இறுதியில் நேர்ந்தது என்னவென்பதை மக்கள் அறி வார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணிகளை விடுவிக்கவும், இராணுவ முகாம் களையும், பாதுகாப்பு தடுப்புக்களை அகற்றவும் அர சாங்கம் அவதானம் செலுத்தி யுள்ளது.

உலகில் 38 நாடுகளில் விடு தலை புலிகள் மீதான தடை இன் றும் அமுலில் உள்ளது என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரபல்யமடை வதற்காக தேசிய பாதுகாப்பு டன் தொடர்புடைய அம்சங் களை பலவீனப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பாரிய இழப்புகளுக்கு மத்தி யில் தான் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது என் பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# கருக்கலைப்பு செய்த பெண் மரணம் மகப்பேற்று மருத்துவர், தாதி கைது!

கொழும்பு, நவ. 26

கொழும்பு, தெமட்டகொட பகுதியிலுள்ள வீடொன்றில் கருக்கலைப்பு செய்த பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், வைத் தியர் மற்றும் தாதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலை யொன்றின் மகப்பேற்று வைத தியர் ஒருவரும் மருத்துவ நிலை யத்தின் தாதி ஒருவருமே தெமட் டகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிலியந்தலை பிரதேசத்தில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தனது வயிற்றில் உள்ள குழந்தை யின் சிறுநீரகச் செயலிழப்பு தொடர் பில் இந்த வைத்தியரை சந்தித் துள்ளார்.

குழந்தையின் உயிரைக் காப் பாற்றமுடியாது, எனவே அறு வைச் சிகிச்சை மூலம் தாயின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று மருத்துவர் கூறியுள்ளார்.

அறுவைச் சிகிச்சைக்கு சம்ம தித்தால் அதற்கு இரண்டரை லட்சம் ரூபாய் செலுத்த வேண் டும் என்றும் மருத்துவர் குறிப் பிட்டுள்ளார்.

அதற்கு இணங்கிய பெண், தனது கணவருடன் நேற்று முன் தினம் தெமட்டகொடயில் உள்ள வைத்தியரின் கிளினிக் கிற்கு சென்றுள்ளார்.

அங்கு கருக்கலைப்பு செய்த பின்னர் சுகவீனமடைந்த பெண் நாரஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டார். அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் சந்தேகத்திற் குரியது என உயிரிழந்த பெண் ணின் கணவர் பிலியந்தலை பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளார்.

அதற்கமைய, வைத்தியரை யும் தாதியையும் கைது செய்த தெமட்டகொடை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர். (அ)

# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்காக விண்ணப்பிக்க மேலதிக சலுகைக் காலம்!

கொழும்பு, நவ. 26

அஸ்வெசும நலன்புரி கொடுப் பனவுக்காக விண்ணப்பிப்ப தற்கு நேற்று முதல் மேலதிக சலுகைக்காலம் வழங்க நலன் புரி நன்மைகள் சபை தீர்மானித் துள்ளது.

எதிர்வரும் 02 ஆம் திகதி வரை இந்த காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி கொடுப் பனவுக்கான முதலாம் கட்டத் தின் போது பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப் பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக் காக மேன்முறையீடுகளை சமர்ப் பிக்கவும் இதன்போது சந்தர்ப் பம் வழங்கப்படும் என நலன் புரி நன்மைகள் சபை தெரிவித் துள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் உரிய விண்ணப்பப்படிவங்க ளைப் பூரணப்படுத்தி பிரதேச செயலகங்களில் கையளிக்க வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவங் களை பிரதேச செயலகங்களில் அல்லது நலன்புரி நன்மைகள் சபையின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடி யும் என நலன்புரிகள் நன்மை கள் சபை கூறியுள்ளது.

முதலாம் கட்டத்திற்கு விண் ணப்பித்தவர்கள் தமக்கு பிரச் னைகள் மற்றும் முறைப்பாடு கள் காணப்படுமாயின் அவை தொடர்பிலும், அதற்கு உரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, அவற்றை பூரணப்ப டுத்தி பிரதேச செயலகங்களில் கையளிக்க முடியும் என நலன் புரி நன்மைகள் சபை தெரிவித் துள்ளது.

இதற்காக நேற்று முதல் டிசெம்பர் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட் டுள்ளது.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்காக 455,000 விண் ணப்பங்கள் கிடைக்கப் பெற் றுள்ளதாகவும் முதலாம் கட்டத் தின் கீழ் 17 இலட்சம் பேருக்கு அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக நலன் புரி நன்மைகள் சபை குறிப்பிட் டுள்ளது. (அ)

# அரச கடன் முகாமைத்துவ சட்டம் நேற்று முதல் அமுல்

கொழும்பு, நவ. 26

அரச கடன் முகாமைத்துவ சட்டத்தை நேற்று திங்கட்கி ழமை முதல் அமுல்படுத்தி அதி விசேட வர்த்தமானி அறிவித் தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அதிவிசேட வர்த்த மானி அறிவித்தல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியி டப்பட்டுள்ளது.

அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது.

அரசு சார்பில் கடன் பெறு தல், கடன் வழங்குதல் மற்றும் பொதுக்கடன் வழங்குதல், கடன் முகாமைத்துவ அலுவலகம் அமைத்தல் ஆகிய பணிகள் இந்த சட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாடு செல்ல முயன்ற 3 இந்தியர் விமான நிலையத்தில் வைத்து கைது!

கொழும்பு, நவ. 26

இலங்கை ஊடாக வெளி நாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற இந்திய யுவதி உட்பட மூவர் கட்டுநாயக்க விமான நிலையத் தில் குடிவரவு திணைக்கள அதி காரிகளால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதி குஜராத் மாநிலம் அகமதாபாத் தில் வசிக்கும் 24 வயதுடைய வர் என தெரியவந்துள்ளது.

இந்தியன் எயார்லைன்ஸின் ஏஐ-231 விமானத்தில் மும்பை யிலிருந்து நேற்று முன் தினம் பிற்பகல் 03:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்தார்.

குறித்த பெண் இலங்கைக் குள் நுழைவதற்கான விஸாவை பெற்று, தனது இந்திய கடவுச் சீட்டு மற்றும் பிற ஆவணங் களை அனுமதிக்காக குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைத் துள்ளார்.

சோதனையின் போது பெண் ணின் கடவுச்சீட்டு, சர்வதேச பொலிஸாரின் தொலைந்து போன மற்றும் திருடப்பட்ட தரவுத்தளத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளமை தெரியவந்துள் ளது.

இது தொடர்பில் மேற் கொண்ட விசாரணையின் போது போலியான முறையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட் டமை தெரிய வந்துள்ளது.

அதற்கமைய குறித்த யுவதி மற்றும் அவருடன் பயணித்த மேலும் இரண்டு இந்தியர்கள் கைது செய்தனர்.

குறித்த மூன்று பேரும் உட னடியாகவே இந்தியாவுக்கு மீண்டும் நாடு கடத்தப்பட்ட னர். (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை மீற முடியாது!

## அமைச்சர் சமந்த வித்தியாரட்ன

கொழும்பு, நவ. 26

சர்வதேச நாணய நிதியத்து டனான உடன்படிக்கையை மீற முடியாது என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரட்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

சர்வதேச நாணய நிதியத்து டன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை முறித்துக் கொள்ள முடியாது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நாட் டுக்கு கிடைக்கக்கூடிய விடயங் களை பெற்றுக்கொள்ள நடவ டிக்கை எடுக்கப்படும்.

எனினும் ஏற்கனவே செய் யப்பட்டுள்ள உடன்படிக்கைக ளில் சில சில திருத்தங்களைச் செய்து கொள்வது குறித்து பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தி டமிருந்து அடுத்த கட்ட கடன் தொகையை பெற்றுக்கொள் வதற்கான முனைப்புக்களில் தீவிரம் காட்டப்பட்டு வருகி றது-என்றார். (அ)

# வன விலங்குகளை வேட்டையாடி கொண்டு சென்ற இருவர் கைது!

கொழும்பு, நவ. 26

வன விலங்குகளை வேட்டை யாடி ஓட்டோவில் கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர் கள் நேற்று முன் தினம் ஞாயிற் றுக்கிழமை மாலை கைது செய் யப்பட்டுள்ளதாக மடாட்டுகம பொலிஸார் தெரிவித்தனர்.

மடாட்டுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் அநு ராதபுரம், மடாட்டுகம, எலகமுவ பிரதேசத்தில் சந்தே கத்திற்கிட மான முறையில் பயணித்த ஓட்டோ ஒன்றில் மேற் கொள்ளப் பட்ட சோதனையில் சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மடாட்டுகம மற்றும் நுககஹ வத்த ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 23 மற்றும் 37 வயது டையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து, வேட்டையாடப்பட்ட 02 காட்டுப் பன்றிகள் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய் யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசார ணையில், எலகமுவ பிரதேசத் தில் உள்நாட்டுத் துப்பாக்கியு டன் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மடாட்டுகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வெள்ள அபாயம் அதிகரித்து வருவதால் 3 முகத்துவாரங்கள் அவசரமாக திறப்பு



கல்முனை, நவ. 26

**கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் மழை - வெள்ள அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் மூன்று முகத்துவாரங்கள் அவசரமாக திறக்கப்பட்டுள்ளன. இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அபாயம் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.**

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் பெய்து வருகின்ற தொடர் மழை காரணமாக இப்பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டதையடுத்து கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸின் அறிவுறுத்தலின் பேரில் சாய்ந்தமருது, கல்முனை மற்றும் பெரிய நீலாவணை ஆகிய இடங்களில் உள்ள தோணா முனைகளான கடல் முகத்துவாரங்கள் தோண்டப்பட்டு வெள்ள நீரை கடலுக்குச் செலுத்துவதற்கான துரித நடவடிக்கை கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் கல்முனை கிரீன் பீல்ட் பகுதி உள்ளிட்ட சில இடங்களில் கடும் காற்றால் முறிந்து வீழ்ந்த மரங்களும் மாநகர சபையினரால் உடனுக்குடன் வெட்டி அகற்றப்பட்டு போக்குவரத்து தடங்கல்களும் அபாய நிலைமைகளும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அப்பகுதிகள் இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் அங்கும் இங்குமாக வடிகான்களில் ஏற்பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டு வெள்ள நீரோட்டம் சீரமைக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை மாநகர ஆணையாளரின் நேரடி கண்காணிப்பில் பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌசி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் உள்ளிட்ட அதிகாரிகள் களத்தில் நின்று வெள்ள அனர்த்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நெறிப்படுத்தி வருகின்றனர்.

வெள்ள அபாய நிலையில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக இரவு பகலாக ஓய்வின்றி அர்ப்பணிப்புடன் களப்பணியாற்றி வருகின்ற கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கு மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார். (எ)

# “எந்தவொரு தேர்தலிலும் நான் போட்டியிடமாட்டேன்”



மட்டக்களப்பு, நவ. 26

இனிவரும் காலங்களில் எந்தவொரு தேர்தலிலும் நான் போட்டியிட மாட்டேன். புதிய அமைச்சரவையில் வீண் விரயங்களை தவிர்ப்பதற்காக அவை மட்டுப்படுத்தப்பட்டு இருப்பது நாட்டுக்கு நல்லது. இதுவொரு வரவேற்கத்தக்க விடயமும்கூட என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“வடக்கு - கிழக்கிலே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட்டது. திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் அங்கு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக இணைந்து போட்டியிட்டோம். அந்த வகையில் கணிசமான அளவு எங்களுடைய ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு மக்கள் ஆதரவு வழங்கியிருந்தனர்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தேசிய அமைப்பாளர் என்கின்ற ரீதியில் அனைத்து தமிழ் மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் இணைந்து செயல்படாவிட்டால் தமிழ்த் தேசியம் அழிந்து போகும் என்பதனை சிந்தித்து அனைவரும் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்”- என்றும் கூறினார். (எ)



# அம்பாறையில் கடும் மழை

கல்முனை, நவ. 26

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. வெள்ளம் வடிந்தோட வசதியாக சாய்ந்தமருது முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான கல்முனை, நிந்தவூர் , காரைதீவு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளது. பலத்த மழை காரணமாக சாய்ந்தமருதில் வீட்டைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதிலில் தென்னை மரம் ஒன்று சாய்ந்ததில் மதில் உடைந்து வீழ்ந்தது. (எ)

# கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்து நடந்து 3 வருடம்

## இன்னும் பாலம் புனரமைக்கப்படவில்லை.

திருகோணமலை, நவ. 26

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் உயிரிழந்தவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவை முன்னிட்டு விசேட பிரார்த்தனை நிகழ்வு குறிஞ்சாக்கேணி பாலம் முன்பு நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிண்ணியா நகர சபை செயலாளர், உலமா சபை, சூறா சபை, கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் உலமாக்கள், மத்ரஸா மாணவர்கள் உட்பட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த படகுப் பாதை விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உள்ளடங்கலாக பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய் உட்பட 08 அப்பாவி பொது மக்களின் உயிர்கள் பறிபோயின.



இந்த குறிஞ்சாக்கேணி பாலம் கடந்த பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாதுள்ளது.

இப்பாலத்தை புனரமைப்பதற்கான அடிக்கல் கடந்த கால அரசியல்வாதிகளால் நடப்பட்டது. எனினும், இப்பாலம் இதுவரை திருத்தப்படவில்லை.

இப்பாலத்தின் ஊடாக தினமும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் பயணம் செய்து வருகின்றனர்.

தற்போது இப்பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழும் நிலையில் காணப்படுகிறது. எனவே, இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர அண்மையில் சென்று பார்வையிட்டார்.

மேலும், ஆளுங்கட்சியில் திருகோணமலை மாவட்டம் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவான வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர இப்பாலத்தின் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனவே, அநுரகுமார அரசாங்கத்தில் இதனை முழுமையாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தலுக்கு தயார்



மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி துயிலும் இல்லம் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக தயாராகி வருகிறது.

கடந்த சில நாட்களாக அங்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது.

நாளை 27 ஆம் திகதி புதன்கிழமை மாவீரர் நாள் நிகழ்வு நடைபெறவுள்ளது.

# “சூறாவளி வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம்”

கல்முனை, நவ. 26

சூறாவளி உருவாகி கல்முனையை தாக்கும் என்று பரப்பப்படும் வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம். ஏ. சி. எம். ரியால் தெரிவித்தார்.

சூறாவளி ஒன்று உருவாகும் பட்சத்தில் மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும் என்பதனை மிகவும் பொறுப்புடன் அறியத்தருகின்றோம்.

மேலும், வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதனால் அனைவரும் வெள்ள அனர்த்தத்துக்குரிய முன்னாயத்தங்களை மேற்க்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றீர்கள் எனவும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகலாயர் கால மசூதியை ஆய்வு செய்ய கடும் எதிர்ப்பு

## உ.பி. கலவரத்தில் 3 பேர் பலி, வாகனங்களுக்கு தீவைப்பு



புதுடில்லி, நவ. 26

**இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் சம்பல் நகரிலுள்ள முகலாயர் காலத்தில் கட்டப்பட்ட ஜமா மசூதியை ஆய்வு செய்ய சென்றபோது அதிகாரிகளுக்கும், உள்ளூர் மக்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இது கலவரமாக மாறியதில் 3 பேர் உயிரிழந்தனர். 30 பொலிஸார் காயமடைந்தனர்.**

உத்தர பிரதேச மாநிலம் சம்பல் நகரில் ஜமா மசூதி கட்டப்படுவதற்கு முன்பாக அந்த இடத்தில் இந்துக் கோவில் இருந்ததாகவும், எனவே, அந்த இடத்தில் ஆய்வு நடத்தி உண்மை தன்மையை உறுதிப்படுத்தக் கோரியும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இதையடுத்து, அந்த மசூதியில் ஆய்வு நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து, தொல்லியல் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்வதற்காக சம்பல் பகுதியிலுள்ள ஜமா மசூதிக்கு சென்றனர்.

அப்போது, அங்கு கூடியிருந்த மக்கள் மசூதியில் ஆய்வு நடத்துவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இருப்பினும், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மசூதியை ஆய்வு செய்வதில் அதிகாரிகள் உறுதியாக இருந்தனர். இதையடுத்து, அந்த பகுதியில், போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது.

கலவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கும்பலை கலைத்தனர்.

இந்த வன்முறைச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்தனர். 30இற்கும் மேற்பட்ட பொலிஸார் காயமடைந்தனர். (எ)



# இஸ்ரேல் மீது நேற்று ஒரேநாளில் 250 ரொக்கெட்கள் ஏவி தாக்குதல்

பெய்ரூட், நவ. 26

இஸ்ரேல் மீது நேற்று ஒரே நாளில் 250 ரொக்கெட்களை ஏவி ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 7 பேர் காயமடைந்தனர் காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ் மீது இஸ்ரேல் போர் அறிவித்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா போராளிகள் ரொக்கெட் தாக்குதல் நடத்தியது. நேற்று ஒரேநாளில் இஸ்ரேல் மீது 250 ரொக்கெட்கள் ஏவப்பட்டன. இந்தத் தாக்குதலில் 7 பேர் காயமடைந்தனர்.



# குண்டர்கி தொகுதியில் பா.ஜ.க. 30 ஆண்டுகளுக்கு பிறகு வெற்றி

## 11 முஸ்லிம்கள் தோல்வி

புதுடில்லி, நவ. 26

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் குண்டர்கி தொகுதி இடைத்தேர்தலில் பா. ஜ. கவின் இந்து வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

உத்தரபிரதேசத்தில் வெற்றிடமாகவுள்ள 9 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் பா. ஜ. க. 6 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதில், முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் குண்டர்கி தொகுதியில் (மொரதாபாபத் மாவட்டம்) பா. ஜ. க. சார்பில் போட்டியிட்ட இந்து வேட்பாளர் ராம்வீர் சிங் 1, 44, 791 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இங்கு போட்டியிட்ட சமாஜ் வாதி, பகுஜன் சமாஜ், சுயேச்சைகள் உள்ளிட்ட 11 முஸ்லிம் வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர். 30 ஆண்டுகளுக்குப் பிறகு பா. ஜ. க. இந்தத் தொகுதியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. (எ)

# 300 பில்லியன் டொலர் மிக குறைவு ஒப்பந்தத்தை நிராகரித்த இந்தியா

அஜர்பைஜான், நவ. 26

"2035ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 300 பில்லியன் டொலர்கள் என்ற புதிய காலநிலை நிதி தொகுப்பு மிகக் குறைவானது மற்றும் மிகவும் தாமதமான முடிவு. எனவே, இந்த நிதி தொகுப்பின் தற்போதைய வடிவத்தில் அதனை நாங்கள் ஏற்கவில்லை"- இவ்வாறு இந்திய பொருளாதார விவகாரத் துறை ஆலோசகர் காந்தினி ரெய்னா தெரிவித்தார்.

வளரும் நாடுகள் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிர்வகிப்பதற்கும், பிரச்னைகளை சமாளிப்பதற்கும் தேவையான நிதியுதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வளர்ந்த நாடுகள் வழங்குகின்றன. இதற்காக ஐ. நா. காலநிலை நிதி தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதி தொகுப்பு தொடர்பில் ஐ. நா. காலநிலை மாநாட்டில் ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அவ்வகையில், காலநிலை நிதியிலிருந்து ஆண்டுக்கு 100 பில்லியன் டொலர் வழங்க கடந்த 2009இல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அஜர்பைஜானில் நடைபெற்ற ஐ. நா. காலநிலை மாநாட்டின் நிறைவு நாளான நேற்று முன்தினம் காலநிலை நிதி தொகுப்பு தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டன. இதன் முடிவில், காலநிலை நிதி தொகுப்பை மூன்று மடங்காக உயர்த்த தீர்மானிக்கப்பட்டது. அதாவது, காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவதற்கு 2035ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 300 பில்லியன் டொலர்களை ஒதுக்க முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தை இந்தியா நிராகரித்தது. மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியா சார்பில் பொருளாதார விவகாரத்துறை ஆலோசகர் காந்தினி ரெய்னா கூறுகையில், காலநிலை நிதி ஒப்பந்த செயல்முறை நியாயமற்றது என்றும், இந்த நிதி மிகக் குறைவு என்றும் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பில் முடிவு எடுப்பதற்கு முன்னர் நாங்கள் அறிக்கை வெளியிட விரும்புவதாக கோரிக்கை விடுத்திருந்தோம். இருப்பினும், மேடையில் வைத்து மட்டும் எடுக்கப்பட்ட இந்த முடிவு ஏமாற்றமளிக்கிறது.

உங்கள் செயல்பாடுகளை நாங்கள் பார்த்தோம். உறுப்பு நாடுகளை பேச விடாமல் புறக்கணிப்பது காலநிலை மாற்றம் தொடர்பான ஐ. நா. கட்டமைப்பு மாநாட்டின் அமைப்புக்கு பொருந்தாத செயல். நீங்கள் எங்களின் கருத்து மற்றும் ஆட்சேபனைகளை கேட்க வேண்டுமென விரும்புகிறோம். எனவே, இந்த ஒப்பந்தத்தை நாங்கள் முற்றிலும் எதிர்க்கிறோம்"- என்றார்.

# இந்திய நடைமுறைக்கு எலான் மஸ்க் பாராட்டு

வாஷிங்டன், நவ. 26

இந்தியாவின் வாக்கு எண்ணிக்கை நடைமுறையை உலகின் முன்னணி தொழிலதிபர் எலான் மஸ்க் பாராட்டியுள்ளார். அதேவேளை, அமெரிக்க தேர்தல் முறை மீது கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்தியா 64 கோடி வாக்குகளை ஒரே நாளில் எண்ணி முடித்தது எப்படி? என்ற ஒரு ஊடக செய்தித் தலைப்பை ஒருவர் எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதை தனது சமூக வலைத்தளப்பக்கத்தில் பகிர்ந்து டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரி எலான் மஸ்க், "இந்தியா 64 கோடி வாக்குகளை ஒரே நாளில் எண்ணி முடித்தது. கலிபோர்னியாவில் வாக்கு எண்ணிக்கை இன்னும் தொடர்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது. பெரும்பாலான மாகாணங்களில் தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டன. ஆனாலும் அதிக மக்கள் தொகை கொண்ட கலிபோர்னியாவில் இன்னும் வாக்கு எண்ணிக்கை முடியவில்லை. தேர்தல் முடிந்து 20 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் அங்கு தேர்தல் முடிவு வெளியாகவில்லை என்பதைத்தான் எலான் மஸ்க் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# இந்திய பெருங் கடலில் படகுகள் மூழ்கி விபத்து

## 24 பேர் பலி, 46 பேர் மீட்பு

மொகதிசு, நவ. 26

இந்திய பெருங் கடலில் இரண்டு படகுகள் மூழ்கியதில் 24 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு சோமாலியா. இந்த நாட்டை சேர்ந்த பலர் பொருளாதார வாய்ப்புகளை தேடி ஐரோப்பாவுக்குள் நுழைய ஆபத்தான கடல்வழி பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின்போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழ்கின்றன.

இந்த நிலையில், சோமாலியாவை சேர்ந்த 70 பேர் 2 படகுகளில் இந்திய பெருங்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக 2 படகுகளும் விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். விபத்தில் சிக்கிய 46 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டேவிஸ் கிண்ண ரென்னிஸில் இத்தாலி அணி சம்பியனானது




ரோம், நவ. 26

ஆண்கள் அணிகளுக்கான டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் அசத்தலாக விளையாடிய இத்தாலி அணி சம்பியனானது.

நடப்பு சம்பியனான இத்தாலி, நெதர்லாந்து அணியுடன் மோதியது. இந்தப் போட்டியின் முதல் ஆட்டத்தில், இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினி 6 - 4, 6 - 2 என்ற செட்களில் நெதர்லாந்தின் வான் டெ ஜாண்ட்ஷூல்பினை வீழ்த்தினார். இவர் காலிறுதியில் ரபேல் நடாலை வீழ்த்தியவர்.

மற்றுமொரு ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான ஜன்னிக் சின்னெர் நெதர்லாந்தின் டாலோன் கிரீஸ்பூக்கரை 7 - 6 (2), 6 - 2 என்ற செட்களில் தோற்கடித்தார். இதன் மூலம் இத்தாலி அணி 2 - 0 என்ற கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

கடந்த 104 ஆண்டுகளாக முயன்று வரும் நெதர்லாந்து இந்தக் கட்டத்துக்கு வந்தது இதுவே முதல் முறையாகும். கடந்த 11 ஆண்டுகளில் இத்தாலி அடுத்தடுத்து டேவிஸ் கிண்ணத்தை வென்ற முதல் அணியாக உருவெடுத்துள்ளது. இதுவரை மொத்தம் 3 முறை (1976, 2023, 2024) இத்தாலி அணி கிண்ணத்தை வென்றுள்ளது. அண்மையில் மகளிர் அணிகளுக்கான பில்லி ஜீன் கிங் கிண்ண போட்டியில் இத்தாலி சம்பியனாகியிருந்தது. (எ)

# 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அசத்தல் வெற்றி

### சொந்த மண்ணில் சொதப்பியது ஆஸி.




பெர்த், நவ. 26

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகள் இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ண தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தெரிவு செய்த இந்தியா முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 104 ஓட்டங்கள் சேர்த்தது.

இதனையடுத்து 46 ஓட்டங்கள் முன்னிலையுடன் விளையாடிய இந்தியா தனது 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 487 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 161 ஓட்டங்களும், விராட் கோலி 100 ஓட்டங்களும் குவித்தனர். அவுஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக லயன் 2 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு 534 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனையடுத்து கடின இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 12 ஓட்டங்கள் எடுத்திருந்தது. உஸ்மான் கவாஜா 3 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இதையடுத்து 4ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணியினர் இந்தியாவின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் திணறினர்.

கவாஜா 4 , ஸ்மித் 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து ஜோடி சேர்ந்த ட்ராவிஸ் ஹெட் மற்றும் மிட்செல் மார்ஷ் இணை நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தது. இதில் ட்ராவிஸ் அரைச்சதம் அடித்தார். அவர் 89 ஓட்டங்களிலும், மிட்செல் மார்ஷ் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த ஸ்டார்க் 12 ஓட்டங்களிலும், நாதன் லயன் ஓட்டமின்றியும் ஆட்டமிழந்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 58. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 238 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி 295 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக பும்ரா, சிராஜ் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.(எ)

## 4 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி

கேப்டவுன், நவ. 26

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ரி - 20 போட்டியில் இங்கிலாந்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் ரி - 20 போட்டிகள் முதலில் நடைபெறுகின்றன. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 142 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா தரப்பில் அதிகபட்சமாக நாடின் டி கிளார்க் 29 ஓட்டங்கள் எடுத்தார். இங்கிலாந்து தரப்பில் சார்லி டீன் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இங்கிலாந்து 19. 2 ஓவரில் 6 விக்கெட்கள் இழந்து 143 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக நாட் ஸ்கிவர் - பிரண்ட் 59 ஓட்டங்கள் எடுத்தார். இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நாளை 27ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)




## டோனியுடன் மீள இணைந்து விளையாட காத்திருக்கிறேன்

### ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவிப்பு



பெர்த், நவ. 26

எம். எஸ். டோனி மற்றும் ருதுராஜ் உடன் இணைந்து விளையாட காத்திருக்கின்றேன் என்று ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்தார்.

18ஆவது ஐ. பி. எல். தொடர் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் (முன்னணி வீரர்கள்) ஜெட்டா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்திய அணியின் முன்னணி வீரரான சென்னையை சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வினை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரூ. 9.75 கோடிக்கு வாங்கியது.

அஸ்வின் 2008 முதல் 2015 வரை ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடியுள்ளார். தற்போது 9 வருடங்களுக்கு பின் மீண்டும் "மண்ணின் மைந்தன்" அஸ்வின் சென்னை அணியில் இணைந்திருப்பது இரசிகர்களை மகிழ்வித்துள்ளது. இந்த நிலையில், சென்னை அணியில் முன்னாள் தலைவர் டோனி, தற்போதைய தலைவர் ருதுராஜ் உடன் இணைந்து விளையாட காத்திருக்கிறேன் என அஸ்வின் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியவை,"வாழ்க்கை ஒரு வட்டம் என சிலர் சொல்வார்கள். சென்னை அணிக்காக கடந்த 2008 முதல் 2015 வரை விளையாடியதுதான் எனது கிரிக்கெட் பயணத்துக்கு உதவியாக இருந்தது. 2011இல் என்னை ஏலத்தில் எடுக்க சென்னை போட்டி போட்டதுபோல தற்போதும் நிர்வாகம் செயல்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு பிறகு சி. எஸ். கேவுக்கு விளையாடுவது பெருமையாக உள்ளது" - என்றார்.(எ)

## சி. எஸ். கே. அணியில் அஸ்வின்

டுபாய், நவ. 26

2025 ஐ. பி. எல். கிரிக்கெட் தொடருக்காக நடைபெற்ற மெகா ஏலத்தில் இந்திய வீரர் ரிஷப் பண்ட் 27 கோடி ரூபாய்க்கு லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியால் எடுக்கப்பட்டுள்ளார். இதேவேளை, ஸ்ரேயஸ் ஐயரை 26. 75 கோடி ரூபாய்க்கு பஞ்சாப் கிங்ஸ் அணி வாங்கியுள்ளது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி (சி. எஸ். கே) ரவிச்சந்திரன் அஸ்வினை 9. 75 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது.

ஐ. பி. எல். 2025 கிரிக்கெட் தொடருக்கான மெகா ஏலம் சவுதி அரேபியாவிலுள்ள ஜெட்டாவில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு தொடங்கியது.

இதன்போது, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி (சிஎஸ்கே) ரவிச்சந்திரன் அஸ்வினை ரூ. 9.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. மேலும், டெவான் கான்வேயை ரூ.6.25 கோடிக்கும், கலீல் அகமதுவை ரூ. 4.8 கோடிக்கும், ரச்சின் ரவீந்திராவை ரூ.4 கோடிக்கும், ராகுல் திரிபா தியை ரூ.3.40 கோடிக்கும் ஏலத்தில் எடுத்துள்ளது. நூர் அகமதுவை ரூ.10 கோடிக்கும், விஜய் சங்கரை ரூ.1.20 கோடிக்கும் வாங்கியது. (எ)

## நடராஜனை ரூ.10. 75 கோடிக்கு வாங்கியது டில்லி அணி



டுபாய், நவ. 26

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் நடராஜனை ரூ. 10.75 கோடிக்கு வாங்கியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

சவுதி அரேபியாவில் நடைபெற்று வரும் ஐ. பி. எல். மெகா ஏலத்தில் தமிழகத்தை சேர்ந்த வீரர் நடராஜன் ரூ. 10.75 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2017 முதல் ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார் நடராஜன். முதல் சீசனை பஞ்சாப் கிங்ஸ் (அப்போது 'கிங்ஸ் லெவன் பஞ்சாப்') அணிக்காக விளையாடினார். 2018 முதல் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியில் விளையாடினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைபேசிக்கு...

இலட்சம் ரூபா பணமே களவாடப்பட்டுள்ளது. இளைஞனின் தொலைபேசிக்கு அழைப்பேற்படுத்தியவர்கள், அவரது டயலொக் தொலைபேசிக்க ரூ.75,000 பணப்பரிசில் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இளைஞனின் வங்கிக் கணக்கில் ரூ.5,000 இற்கும் அதிகமான பணம் வைப்பிலிருந்தாலே அந்த பணப்பரிசில் கிடைக்குமென்றும் தெரிவித்துள்ளனர்.

இளைஞனின் வங்கிக் கணக்கிலக்கத்தையும், அடையாள அட்டை இலக்கத்தையும் அவர்கள் பெற்றுள்ளனர். இதன் பின்னர், இளைஞனின் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த இரண்டு இலட்சம் ரூபா அபகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இளைஞன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொள்ளையர்கள் 0763978279 என்ற இலக்கத்திலிருந்தே கொள்ளையர்கள் தொடர்பு கொண்டுள்ளனர்.

தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டு பணப்பரிசில் கிடைத்துள்ளதாக பேசுபவர்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென பொலிஸார் கேட்டுள்ளனர். (அ)

## வலுக்கட்டாய...

முயற்சித்துள்ளார்.

இதன்போது ரஷ்ய விமான நிலையத்தில் தரை இறங்கி அங்கிருந்து முகவர் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்கு செல்ல வேண்டும் என அவருக்கு வெளிநாட்டு முகவர்களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்ய விமான நிலையத்தில் தரையிறங்கிய இளைஞனுடன் முல்லைத்தீவை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரும் யாழ்ப்பாணம் மெல்லியடைய சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரும் குருநகர் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரும் ஒன்றாக இணைந்து பயணித்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் ரஷ்ய விமான நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்து செல்வதாக முகவர் குறிப்பட்டு இளைஞர்களை அழைத்துச் சென்றுள்ளார். அதனை அடுத்து அங்குள்ள இராணுவ முகாமில் இவர்களைத் தங்க வைத்து இவர்களுக்கு ரஷ்ய இராணுவத்தின் சீருடைகள் வழங்கப்பட்டு 15 நாட்கள் கட்டாயமாக பயிற்சியின் பின்னர் உக்ரைன் நாட்டின் எல்லையில் போருக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக குருநகர் பகுதியை சேர்ந்த கோமஸ் அதிஸ்ரராஜா மிதுர்ஷன் தாயாருக்கு தனது புகைப்படங்களைத் பகிர்ந்துள்ள நிலையில் இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. குறித்த பயணத்துக்காக முகவர் ஒருவருக்கு ஒவ்வொருவரும் தலா 60 லட்சம் ரூபாய் வரையான பணத்தை இவர்கள் செலுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் 280 இற்கும் மேற்பட்ட இலங்கை ராணுவத்தினர் ரஷ்ய படைகளோடு இணைந்து, உக்ரை னுக்கு எதிராக சண்டையிட்டு வருவதாக அண்மையில் தகவல் ஒன்று வெளியாகியது.

அவ்வாறு இணைந்துள்ள இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஒருவரை உக்ரேன் இராணுவம் உயிருடன் கைது செய்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற காணொளி ஒன்றும் கடந்த 21ஆம் திகதி வெளியாகியிருந்தது.

இலங்கையில் உள்ள ரஷ்ய மாபியாக்கள், மூலமாக ரஷ்ய ராணுவத்திற்கு ஆட்கள் திரட்டப்படுவதாக குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலையிலேயே 6 தமிழ் இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றிருந்த நிலையில் வலுக்கட்டாயமாக ரஷ்ய படைகளில் இணைக்கப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## எதிர்வரும்...

மின்சார சபையின் இலாபத்திலிருந்து பயனாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நேரிடும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டணத் திருத்த யோசனையை தயாரிப்பதற்காக இலங்கை மின்சார சபை இதற்கு முன்னரும் இரண்டு சந் தர்ப்பங்களில் கால அவகாசம் கோரியுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

## சட்டங்களை...

தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை பிரதி அமைச்சராக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட பலவீனமே கடந்த காலங்களில் சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்ததில் செல்வாக்கு செலுத்தியது. நாட்டில் போதியளவு சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. அது மாத்திரமின்றி சட்டங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. நாட்டை அழிக்கும் பதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு எமது அரசாங்கத்துக்கு காணப்படுகிறது. - என்றார். (அ)

## தலைமை...

அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டில் இல்லை. அவர் நாடு திரும்பியதும் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்க்கிறோம். மேலும், அனைத்து வலதுசாரி அரசியல்வாதிகளையும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து வலதுசாரி அரசியல் குழுக்களும் ஒன்று சேரவேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து இந்த பிளவுகளை களைந்து முன்னோக்கி செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கிறோம்-என்றார்.

## அபிவிருத்தி...

சர்வதேச திணைக்கள உப அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான சீனத் தூதுக்குழு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்திருந்தது.

அதன்படி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார பெற்ற வெற்றிக்கும், பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்குக் கிடைத்த அமோக வெற்றிக்கும் வாழ்த்துத் தெரிவித்த சீன உப அமைச்சர், இந்த வெற்றிகளின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள பரிமாற்றங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமையில் இலங்கையுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்பட சீனா தயாராக இருப்பதாகவும் உப அமைச்சர் தலைமையிலான குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

சீனா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர நன்மை பயக்கும் நீண்ட கால ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## 200மில்லியன்...

எரிசக்தி மேம்பாட்டை எளிதாக்கு தல், எரிசக்தி உற்பத்தி செலவைக் குறைப்பதனை இலக்காகக் கொண்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக இந்தத் தொகை வழங் கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கிளிநொச்சியில்...

தெரிவித்துள்ளது.

நேற்று மாலை 4 மணிக்கு வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 392 குடும்பங்க ளைச் சேர்ந்த 1458 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

பாரதிபுரம், தொண்டமான்நகர், மாவடியம்மன், கனகபுரம், கண்ணகிபுரம், இராமநாதபுரம், திருநகர், கனகாம்பிகைக்குளம், திருவையாறு, ஜெயந்தி நகர் பகுதிகளிலேயே இவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 100 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

பிரமந்தனாறு, கோக்கன்கட்டு, தர்மபுரம் கிழக்கு, உமையாள்புரம் பகுதிகளில் இவ்வாறு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிப் ஒரு வீடு பகுதி சேதத்துக்குள்ளானதுடன், அவ்வீட்டில் வசித்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-05)

## யாழில்...

குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 10 வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

ஊர்காவல்துறை பிரதேச செயலர் பிரிவில் 215 குடும்பங்களை சேர்ந்த 901 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களை சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களை சேர்ந்த 64 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 574 குடும்பங்களை சேர்ந்த 2341 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு முழுமையாகவும், ஒரு வீடு பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 141 குடும்பங்களை சேர்ந்த 508 பேர் வெள்ள அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 266 குடும்பங்களை சேர்ந்த 932 பேர் பல அர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 19 குடும்பங்களை சேர்ந்த 73 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நான்கு வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 470 குடும்பங்களை சேர்ந்த 1520 பேர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளன - என்றார். (அ-05)

## புயல்...

40 கி.மீ. தூரத்தில் காணப்படும். இன்று மாலை 3.00 மணியளவில் அம்பாறைக்கு மிக அண்மித்து அம்பாறையில் இருந்து 82 கி.மீ. தூரத்தில் அதன் மையம் காணப்படும். இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 27 ஆம் திகதி அதிகாலை 2.00 மணியளவில் மட்டக்களப்பு நகரில் இருந்து 91 கி.மீ. இல் காணப்படும்.

அதன் பின்னர் நண்பகல் 1.00 மணியளவில் திருகோணமலையில் இருந்து 94 கி.மீ. தூரத்தில் காணப் படும். பின்னர் 27ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து கிழக்காக 109 கி.மீ. தூரத்தில் இந்த புயல் காணப்படும். தற்போதைய நகரும் வேகத்தில் தான் இந்த புயலின் இடவ மைவு மேற்குறிப்பிட்ட இடங்களில் காணப்படும். நகரும் வேகம் மாற்றமடைந்தால் இடங்களும் மாறும் என்பதைக் கருத்தில் கொள்க.

கரையைக் கடக்கும் இடம் இன்னமும் தெளிவாகவில்லை. தீர்மானமாக அறிந்ததும் தெரிவிக்கப்படும்.

ஆனால் இந்த புயல் நகரும் வேகம் குறைந்தால் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆபத்து நிலை அதிகரிக்கும். பொதுவாக ஒரு புயல் கடலில் அதிகம் நிலை கொண்டால் தன்னை வீரியப்படுத்துகின்றது என அர்த்தம்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் கன மழை நேற்று இரவு முதல் இன்னும் அதிகரிக்கும்.

இன்று முதல் வவுனியா மாவட்டத்திற்கும் கன மழை கிடைக்க தொடங்கும்.

இன்று அதிகாலை முதல் குறிப்பாக காலை 7.00 மணி முதல் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மிகக் கன மழை கிடைக்க தொடங்கும். பல பகுதிகளுக்கும் வெள்ள அனர்த்த வாய்ப்புண்டு. குளங்களின் கீழுள்ள மக்களுக்கு வெள்ள அனர்த்த எச்சரிக்கையை முன் கூட்டியே வழங்குதல் உசிதமானது.

இன்று நண்பகலுக்கு பின்னர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் கன மழை கிடைக்க தொடங்கும். யாழ்ப்பாண மாவட்டத்தின் வெள்ள அனர்த்த வாயப்புள்ள மக்கள் இன்று முதல் மிக மிக அவதானமாக இருப்பது அவசியம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் இன்று முதல் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புண்டு. அம்பாறை மாவட்டத்தில் இன்று இரவு முதல் காற்றின் வேகம் அதிகரிக்கும்.

இடி மின்னல் நிகழ்வுகளும் இடம் பெறும் என்பதனால் இடி மின்னல் தொடர்பிலும் மக்கள் அவதானமாக இருப்பது அவசியம். அந்த வகையில் நேற்று இரவு மட்டக்களப்பு, திருகோணமலையிலும் இன்று காலை முதல் முல்லைத்தீவிலும் இன்று மாலை முதல் யாழ்ப்பாணத்திலும் பரவலாக இடி மின்னல் நிகழ வாய்ப்புள்ளது.

வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் மிக பாதிப்பை ஏற்படுத் தும் நாட்களை நாம் நெருங்குகின்றோம். இன்றும் நாளையும் நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நேற்று மாலைவரையே பல பிரதேசங்களிலும் வெள்ள நீர் தேங்க தொடங்கியுள்ளது. இன்று முதல் நிலைமை மிக மோசமாக மாறும். எதிர்பார்க்கப்படும் அனர்த்தப் பாதிப்பை விட கூடிய முன்னாயத்தத் தோடு நாம் இருந்தால் எமக்கு ஏற்படும் பாதிப்புக்களை கணிசமாகக் குறைக்க முடியும்.

அரச திணைக்களங்களும், அரச அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், தன் னார்வ தொண்டர்களும் உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த களத்தில் செயற்படுகிறார்கள். அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி எங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொள்வோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# ஈ.பி.டி.பியிலிருந்து விலகினார் திலீபன்

வவுனியா, நவ. 26

முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா நிர்வாகச் செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியில் இருந்தும் அதன் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் வெளியேறுவதாக நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாதவது-

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் (தமிழரசுக் கட்சியில்) ஆரம்பித்த எனது அரசியல் பயணம், பின்பு, 2013ஆம் ஆண்டிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) உடன் இணைந்து கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராக பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். மேலும், 2020இல் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன்.

தற்போது நடைபெற்ற 2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளே கிடைக்கப் பெற்றன.

இதுவரை காலமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன். சில விடயங்கள் காரணமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகுகிறேன். இது தொடர்பான கடிதத்தை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

இக் கட்சியில் இருந்து நான் வெளியேறுவதற்கு, கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணமில்லை, எனது தனிப்பட்ட முடிவு என்பதை தெரிவித்துள்ளேன் - என்றுள்ளது. (அ)

# இலங்கையின் ஏற்றுமதி செயற்திறன் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 26

இந்த ஆண்டு ஆடை ஏற்றுமதி வருவாய் ஆண்டின் இரண்டாம் பாதியில் அதன் ஆரம்ப இலக்கான 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை தாண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைத் கைத் தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஆடை ஏற்றுமதி வருவாய் 2022 ஆம் ஆண்டுக்கு இணையாக இருந்தது. எனினும், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில், ஈட்டிய வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அவதானிக்க முடிந்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் ஆடை ஏற்றுமதி வருமானம் 299.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த போதிலும், ஒகஸ்ட் மாதத்தில் 485.6 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் நேர்மறையான முன்னேற்றம் காணப்படும் நிலையில், தற்போது 5 பில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டுவதற்காக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அரசின் நிலைப்பாடு டிசெ. 2இல்!

கொழும்பு, நவ. 26

**புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எதிர்வரும் 2ஆம் திகதி உயர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த 3 குழுக்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறித்த விடயங்களை கருத்திற்கொண்டு எடுக்கப்படும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சட்ட மா அதிபரின் ஊடாக உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதி இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் ஆகியவற்றுக்கு தடை விதித்து உயர் நீதிமன்றத்தால் கடந்த 18ஆம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 4 அடிப்படை உரிமை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன உள்ளிட்ட நீதியரசர்கள் குழாத்தினால் குறித்த மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன.

இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்த நீதியரசர்கள் குழாம், புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளை இரத்துச் செய்து அதனை மீள நடத்துவதற்கு காணப்படும் இயலுமை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளிடம் காரணங்களை வினவி நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்னவுக்கு அறிவித்தது.

பரீட்சார்த்திகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டினர். (அ)

# வீடுகளை ஒப்படைக்காமல் வெளிநாடு சென்றுள்ள ஐந்து முன்னாள் எம்.பிக்கள்

கொழும்பு, நவ. 26

மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளை வழங்காமல் 5 முன்னாள் உறுப்பினர்கள் வெளிநாட்டில் தங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக வீடுகளை பொறுப்பெடுக்கும் பாராளுமன்ற அதிகாரிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் 80 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 20 உறுப்பினர்களின் வீடுகள் மட்டுமே ஒப்படைக்கப்பட உள்ளதாக பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடனடியாக வீடுகளை ஒப்படைக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகள் நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவெல வீடுகள் வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுமார் 40 புதிய உறுப்பினர்கள் வீடுகள் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக பாராளுமன்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# இரண்டு அமைச்சுக்களுக்கு புதிய செயலர்கள் நியமனம்

கொழும்பு, நவ. 26

இரண்டு அமைச்சுக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புதிய செயலாளர்களை நியமித்துள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்படி, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன நியமிக்கப்பட்டுள்ளார். கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளராக மலர்மதி கங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து மறு அறிவித்தல் வரை இடம்பெறாது!

யாழ்ப்பாணம், நவ. 26

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து நேற்று திங்கட்கிழமை காலை முதல் மறு அறிவித்தல் வரும் வரை இடம்பெறமாட்டாதென நெடுந்தீவு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலை செல்லவேண்டியவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையே இதற்கு காரணமாகும். (அ)

# இவ்வாரம் மீண்டும் கூடும் தேர்தல்கள் ஆணைக்குழு!

கொழும்பு, நவ. 26

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த வாரம் மீண்டும் கூடவுள்ளது.

அதன்படி தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கூடுகிறது.

பாராளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு தேர்தல்கள் ஆணைக்குழு கூடுவது இதுவே முதல் முறையாகும்.

குறிப்பாக, உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் தொடர்பில் இதன்போது தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என அண்மையில் கண்டியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாக, இத்தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு இதுவரை பணம் ஒதுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் இந்த கலந்துரையாடலில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ)

# இந்தியாவுக்கு செல்வது எப்படி என யாழில் விசாரித்த மினுவாங்கொடை கொள்ளையர்!

கொழும்பு, நவ. 26

மினுவாங்கொடையில் ஏழு கோடி ரூபாவை கொள்ளையடித்த வாகனச் சாரதியும் அவரது நண்பரும் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள மீன்பிடிப் படகுக்கு ஐந்து இலட்சம் ரூபாவைச் செலுத்தி இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் ஒப்பந்தம் வழங்கியதாகவும், ஆனால் யாழ்.படகுகாரர்கள் அதனை ஏற்கவில்லை எனவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல யாழ்ப்பாணத்தில் நயினாதீவுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் சில படகோட்டிகளுடன் கலந்துரையாடினர்.

நயினாதீவு, நாக விகாரையை வழிபட்டு, விகாரைக்கு எட்டுப் பிரசாதம் வழங்கிய இந்த இரண்டு சந்தேக நபர்களும், கடற்படை அதிகாரிகள் சிலரைச் சந்தித்த போது எப்படி இந்தியா செல்வது என்றும் கேட்டுள்ளனர்.

ஆனால் இந்த இரண்டு சந்தேக நபர்களையும் கடற்படையினரால் அடையாளம் காண முடியவில்லை என்பதுடன் அவர்கள் மீது எந்தவித சந்தேகமும் எழவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியா செல்வது கடினம் என்பதால், மன்னார் சென்று அங்குள்ள படகு ஓட்டிகளைச் சந்தித்து கலந்துரையாடவேண்டும் என யாழ்.படகு உரிமையாளர்களிடம் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் செல்ல முயன்றுள்ளனர்.

ஆனால் அதற்கு முன்னதாக மினுவாங்கொடையில் இருந்து வாடகை அடிப்படையில் அவர்கள் யாழ்ப்பாணம் வந்த வாகனம் மற்றும் இருவர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

மினுவாங்கொடையில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ஐந்து இலட்சம் ரூபாவுக்கும் மேல் இக்குழுவினர் செலவு செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. திருடப்பட்ட ஏழு கோடி ரூபாயில் ஏறக்குறைய நான்கு கோடி ரூபாயை பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org